**செ. கு. எண்**: 255 **நாள்**: 12.12.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – **12.12.2011**

ஈரோடு நகர குற்றப் பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. N.J.ராஜகோபால் சிங் என்பவர் **2.12.2011** அன்று மாலை பெருந்துறை காவல் நிலைய சரகம், பெத்தாம்பாளையம் பிரிவு அருகில் இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, சாலை விபத்து ஏற்பட்டு, சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி **8.12.2011** அன்று காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயரமடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராஜகோபால் சிங் பணியில் இருக்கும் போது காலமானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. திரு. ராஜகோபால் சிங் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை விபத்தில் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. N.J.ராஜகோபால் சிங் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**